மின்னிதழ்

# தேசியம்

www.thesiyamnews.com

THESIYAM தේසියම්



ஆழ்ந்த இரங்கல்

விஜயகாந்த்

1952 - 2023

தேசியம்

மலர்: 01 | குரல்: [illegible] ஆண்டு 2054 | வெள்ளிக்கிழமை 29.12.2023 | பக்கங்கள் 12



# தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும், தேசியத் தலைவர் வே.பிரபாகரனையும், தமிழீழ மக்களையும் நேசித்த கப்டன் விஜயகாந்த் நேற்றுக் காலமானார்!

## முழு அரச மரியாதையுடன் இன்று இறுதிப் பயணம்.

சென்னை மியாட் மருத்துவமனையில் வழக்கமான மருத்துவப் பரிசோதனைக்காக நேற்றுமுன்தினம் சேர்க்கப்பட்ட விஜயகாந்துக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதியானது. அவருக்கு மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டதால் வெண்டிலேட்டர் உதவியுடன் தீவிர சிகிச்சை வழங்கப்பட்டது. எனினும், சிகிச்சை பலனின்றி அவர் நேற்றுக் காலை காலமானார்.

தென்னிந்தியாவில் பிரபல நடிகராக மட்டும் அல்ல சிறந்த அரசியல் தலைவராகவும் விஜயகாந்த் போற்றப் படுகின்றார். தமது சேவைகளால் மக்கள் மனதை அவர் வென்றவர். தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் (தே.மு.தி.க.) தலைவரான விஜயகாந்த், தமிழக சட்ட சபையில் எதிர்க்கட்சித் தலைவராகவும் பதவி வகித்தார். ஈழத் தமிழர்களுக்காகவும் அவர் குரல் கொடுத்து வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஆசிரியர் பீடம்



தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com

## தமிழர்களின் ஜனாதிபதி வேட்பாளர்!

ஜனாதிபதித் தேர்தல் 2024இல் நடத்தப்படும் என்று தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருக்கிறார். இலங்கை வரலாற்றில் பதவியிலிருந்த ஜனாதிபதி விரட்டப்பட்டதனால் தேர்தலில் போட்டியிடாது பாராளுமன்றம் மூலமாக தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியாக இருக்கும் அவர் நாட்டைக் கட்டியெழுப்புகிறார் என்ற சிந்தனை, மாயையும் வளர்ந்த வண்ணமிருக்கிறது. அடுத்த ஜனாதிபதியாக அவரே தெரிவு செய்யப்பட வேண்டும் என்ற கருத்துக்களும் பரவி வருகின்றன. வேறும் பலர் பிரதான கட்சிகளிலிருந்து போட்டியிடுவார்கள் என்றும் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

ஆனால், தமிழர் தரப்பிலிருந்து ஒருவரை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தவேண்டும் என்ற கோரிக்கைகள் இப்போது வந்தவண்ணமிருக்கின்றன. அதே நேரத்தில் அது ஒரு வேண்டாத வேலை என்ற தொனியிலும் கருத்துக்கள் வெளிவருகின்றன.

ஒற்றையாட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இலங்கையில் அதில் எந்தவித மாற்றமும் ஏற்படுத்தப்படாது, ஒற்றையாட்சிக்குள்ளேயே அரசியலமைப்பு கூட திருத்தங்களுக்குள்ளாகும் என்று பல தடவைகளில் இலங்கையின் ஆட்சி பீடங்களால் எடுத்தியம்பட்டுமாயிற்று. இவ்வாறான நிலையில் தமிழ்த் தேசியம் சார்ந்து அரசியலில் ஈடுபட்டு வருபவர்கள் இன்னமும் இலங்கையில் ஒற்றையாட்சி நீக்கப்பட்டு இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் முன்வைக்கப்படவேண்டும், முன்வைக்கப்படும் என்ற எதிர்ப்பார்ப்புகளுடன் செயற்பட்டு வருகிறார்கள். இது இவ்வாறிருக்கையில் தமிழர் தரப்பின் ஒற்றுமையீனம் பலவாறான விமர்சனங்களுக்கு உள்ளாகிக்கொண்டிருக்கிறது.

இந்நிலையில்தான் யாரை தமிழர் தரப்பு ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கும் என்ற கேள்வி தமிழ் மக்களிடம் எழுந்திருக்கிறது. இந்தக் கேள்விக்கு பதிலிறுப்பதற்கு யார் முன்வருவார்கள் என்பது தெரியாமலும் இருக்கிறது. ஏனெனில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பென்ற தமிழர் தரப்பின் அரசியல் தரப்பு இப்போது பிரிந்து போய்விட்டது.

ஆனாலும், தங்போதைய பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருக்கின்ற சீ.வி.விக்னேஸ்வரன் தானாக முன்வந்து தன்னை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துங்கள் என்ற தொனியில் கருத்தொன்றை வெளியிட்டிருக்கிறார். அதே போன்று மனோகணேசன் பொருத்தம் என்று வேறொரு தரப்பு கருத்தை வெளியிடுகிறது. இருந்தாலும் தமிழர் தரப்பின் பொதுவான வேட்பாளராக யாரை நிறுத்துவது என்று முடிவு செய்தவற்கிடையில் இன்னமும் பலருடைய பெயர்கள் முன்மொழியப்படலாம் என்று எதிர்பார்க்கலாம். வடக்கு மாகாண சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சு வேட்பாளராக அறிவிக்கப்பட்டு பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று முதலமைச்சரான ஓய்வு பெற்ற நீதியரசர் சீ.வி.விக்னேஸ்வரன் இடைநடுவில் கட்சியின் கட்டுக்குள் இருக்காது தெறித்துப் போனார். அதன் பின்னர் அவர் தனிக்கட்சி அமைத்துக் கொண்டு தன்னுடைய அரசியலைச் செய்துவருகிறார். அவர் இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இருக்கும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் கூட பங்குபற்றவில்லை. இவ்வாறிருக்கையில் அவர் எவ்வாறு தன்னை ஒரு பொதுத் தமிழ் வேட்பாளராக அறிவிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுகிறார் என்பது புரியாததாகவே இருக்கிறது.

எது எவ்வாறானாலும் இக்கேள்விகளுக்கு மத்தியில் பழுக்காத பிஞ்சுக்காக எதற்காக இத்தனை பிரயத்தனங்கள் என்ற கேள்வி மாத்திரமே தொக்கிநிற்கிறது.

# சர்வதேச சட்டத்தரணிகளுக்கான உலககிண்ண கிரிக்கெட் போட்டியில் விளையாட தேர்வான தமிழ் சட்டத்தரணி.



சட்டத்தரணிகளுக்கான சர்வதேச உலகக் கிண்ண கிரிக்கெட் துடுப்பாட்டப் போட்டியில் இலங்கை தேசிய அணி சார்பாக விளையாடுவதற்காக யாழ்ப்பாணத்தை சேர்ந்த கனிஷ்ட சட்டத்தரணி தர்மகுலசிங்கம் அஞ்சனன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பத்து நாடுகளைச் சேர்ந்த அணிகள் பங்குபற்றும் சட்டத்தரணிகளுக்கான சர்வதேச உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டி நேற்றைய தினம் ஆரம்பமானது. இப்போட்டியில் இலங்கை சட்டத்தரணிகள் தேசிய அணியில் விளையாட இளம் சட்டத்தரணி தர்மகுலசிங்கம் அஞ்சனன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

**தேசியம் பத்திரிகையில் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க தொடர்பு கொள்ளுங்கள்..!**

**தொலைபேசி :**

**+94 76 567 3339**



# மனிதம் நிறைந்த அந்த மனிதனின், மாபெரும் கலைஞனின் மறைவுக்கு அஞ்சலிகள்.

## நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் இரங்கல்.

சிறந்த நடிகர் என்ற தொழில்முறை அடையாளத்துக்கும், அங்கீகாரத்துக்கும் அப்பால், மனிதம் நிறைந்த மனிதரும், ஈழ விடுதலைப் போராட்டத்தின் தீவிர பற்றாளருமான விஜயகாந் அவர்களின் மறைவுச் செய்தி மனதைக் கனக்கச் செய்திருக்கிறது. ஈழத்தமிழர்களையும், அவர்களது இனவிடுதலைப் போராட்டத்தையும் தத்தம் சுயங்களை நிலைநிறுத்துவதற்காகப் பயன்படுத்திக்கொண்ட எத்தனையோ தமிழகத் தலைவர்களிலும், நடிகர்களிலும் நின்று முற்றிலும் மாறுபட்ட ஒருவராகவே, ஈழத்தமிழர்களுக்கும் விஜயகாந் அவர்களுக்கும் இடையிலான ஊடாட்டம் இருந்திருக்கிறது. அந்தளவுதூரம் தமிழர்களையும், தமிழின விடுதலைப் போராட்டத்தையும் ஆழ நேசித்தவர் அவர்.

தன் கலைத்துவ வெளிப்பாட்டின் வழி, ஈழத்தமிழர்களின் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் தாய்த்தமிழகத்தில் பகிரங்கமாக நிதி திரட்டிய அவரது தமிழ்த்தேசியப் பற்றுறுதியும், தீவிரத்தன்மையும் இன்றும் எம் இதயங்களைச் சிலிர்க்க வைக்கிறது. பேச்சளவில் மட்டுமே பெரிதும் பயன்பாட்டில் இருக்கும் “சமத்துவம்“ என்ற சொல்லுக்கு ”கடைநிலைத் தொண்டன் வரை ஒரே உணவு” என்ற ஆகப்பெரும் அடிப்படைச் சமத்துவ அர்த்தம் புகுத்தி, அதனைச் செயலாக்கிய மாபெரும் கொடையாளன்.

மனிதம் நிறைந்த அந்த மனிதனின், மாபெரும் கலைஞனின் மறைவுக்கு என் இறுதி அஞ்சலிகள்.



# தமிழரசுக் கட்சியின் தலைவராக வருவதற்கு பல தகுதிகள் இருக்க வேண்டும்.

## அந்த தகுதி இன்னும் எனக்கு வரவில்லை!

## சாணக்கியன் தெரிவிப்பு!



தமிழரசுக்கட்சியின் தலைவராக வருவதற்கு பல தகுதிகள் இருக்க வேண்டும். அந்த தகுதி இன்னும் எனக்கு வரவில்லை, இப்போது கற்றுக்கொண்டிருக்கிறேன். 5 அல்லது 10 வருடங்களில் அந்த தகுதி எனக்கு வந்துவிடும் என பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

இன்று வடமராட்சியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தமிழர் ஒருவரை ஜனாதிபதி வேட்பாளரை நியமிப்பது தொடர்பாகவும் கட்சிக்குள் கூட்டாக இணைந்து செயற்படுவது தொடர்பாகவும் ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விக்கு தொடர்ந்து அவர் பதிலளிக்கையில்,

ஜனாதிபதித்தேர்தலில் கட்சி சார்பாக ஒருவரை நியமிப்பது பற்றி கூட்டத்தில் தீர்மானித்த பின்பே முடிவு எடுக்கப்படும். கடந்த 10 வருடங்களாக அரசியலில் அவதானிப்பவர்களுக்கு, யார் அடுத்த தலைவர் என்பது பற்றி தெரியும். தமிழ் மக்கள் ஏங்கி கொண்டிருப்பது ஒரு அரசியல் தீர்வு வேண்டும் என்பதாகும். எங்களுடைய பல பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வினூடாகவே தீர்வு காண முடியும். அதாவது அதிகார பகிர்வினூடாக மட்டுமே எங்கள் பிரச்சினைகளை தீர்க்க முடியும். டக்ளஸ் தேவானந்தா அமைச்சராக வடக்கில் இருக்கிறார். அவரால் வடக்கில் பிரச்சினை மட்டுமே இருக்கிறது. அவரால் அவருடைய துறை சம்பந்தமான பிரச்சினையை மட்டுமே கையாள முடியும். ஏனைய பிரச்சினைகளை எவ்வாறு அவரால் தீர்க்க முடியும்? ஆகவே எங்களுக்கு அதிகாரங்கள் கிடைத்தால் நாங்களே எங்கள் பிரச்சினைகளை தீர்க்க முடியும். இந்த அரசியல் தீர்வுக்காகவே எங்கள் கட்சி செயற்பட்டுக்கொண்டு இருக்கிறது. ஆகவே அரசியல் சம்பந்தமாக பரந்த அறிவு ஆழமாக இருக்க வேண்டியது அவசியம். இதை தெரிந்த ஒருவர் தான் தலைவராக வரமுடியும். இவ்வாறான விடயங்களை நாங்கள் முன்வைக் கும் போது சர்வதேச ரீதியாக நாங்கள் ஆதரவை திரட்ட வேண்டும். சர்வதேச தொடர்புகள் இருந்தால் தான் மாற்றங்களை செய்ய முடியும். அத்தோடு இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தங்களையும் கொடுக்க முடியும். மொழி மட்டும் சர்வதேச தொடர்பில் ஆதிக்கம் செலுத்து வதில்லை. விடயங் களும் தெரிந்திருக்க வேண்டும் அதன் மூலமாக நாங்கள் ஆதரவை எடுத்து நடைமுறைப்படுத்து வதும் முக்கியமாகும். இந்த 2 தகுதிகளும் தலைவருக்கு அவசியமாகும்.

அவ்வாறான தகுதி என்னிடம் இருந்தால் நானே தலைவர் பதவிக்கு குதித்து விடுவேன். இன்னும் 5 அல்லது 10 வருடங்களில் எனக்கும் அந்த தகுதி வரலாம். நான் எனது பெயரை ஏன் கொடுக்கவில்லை என்றால், எனக்கு தகுதி இன்னும் வரவில்லை. நான் இன்னும் கற்றுக்கொண்டு இருக்கிறேன். எனவே தமிழரசுக்கட்சியின் தலைவராக யார் வரவேண்டுமென்பதை எல்லோரும் சிந்திக்க வேண்டும்.

இவ்வாறான சூழலில் தனது தலைவரை தெரிவு செய்யக்கூடிய சந்தர்ப்பம் ஒவ்வொரு பகுதியில் இருக்கும் ஒவ்வொருவருக்கும் கிடைத்துள்ளது. எங்களுடைய கட்சி எங்கள் பிரதேசத்தில் பிளவுபடாமலே செயற்பட்டுக்கொண்டு இருக்கிறது. கட்சிக்குள் நடக்கும் விடயங்கள் கட்சிக்குள் பிளவு என்பது அல்ல. எனவே அனைவரும் நிலைமைகளை புரிந்துகொண்டு செயற்பட வேண்டும். என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# நடிகர் விஜயகாந்த் மரணம்!

## -கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் இரங்கல்-



உடல் நலக்குறைவால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த தேமுதிக தலைவர் கேப்டன் விஜயகாந்த் உயிரிழந்த செய்தியறிந்து மிகவும் மனவேதனை அடைந்தேன் என கிழக்கு மாகாண ஆளுனரும், இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

விஜயகாந்த் மக்களுக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்த மனிதர். விஜயகாந்துடன் பல முறை ஏற்பட்ட சந்திப்பின் போது அவருடைய எண்ணங்களிலும் செயல்களின் ஊடாகவும் அவர் ஒரு போற்றப்படக் வேண்டிய தலைவர் என்பதை தான் அறிந்தேன். எவருக்கும் அஞ்சாது மக்களுக்காக உடனுக்குடன் சேவையை செய்யும் அரசியல் தலைவன். மேலும் இலங்கை மக்கள் மீது அதீத அன்பு கொண்ட இவர். இலங்கையில் உள்ள பாமர மக்களுக்காக விளம்பரமற்ற பல உதவிகளை செய்துள்ளார்.இவர் பாமர மக்களுக்கு விருந்தோம்பல் செய்வதில் ஈடு இணையற்றவர் இவருடைய இழப்பு தமிழக மக்களுக்கும் ஓர் பேரிழப்பாகும்.

நடிகர் விஜயகாந்த் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும், ரசிகர்களுக்கும், தொண்டர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும்,ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்".

தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.
SCAN ME
No. 27, Kannathiddy Road, Jaffna.Tel : 021 222 7557
E-mail : thesiyamnews@gmail.com
Whatsapp
+94 76 567 3339






# யாழ் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் குழறுபடி: வாக்குவாதம் வலுத்ததால் பரபரப்பு!



இந்திய கடற்றொழிலாளர்கள் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி கடற்றொழிலில் ஈடுபடும் விவகாரம் தொடர்பாக யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பேசப்பட்டபோது கடும் வாக்குவாதம் ஏற்பட்டதாக பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட செயலகத்தில் நேற்று (28) இடம் பெற்ற யாழ்ப்பாண மாவட்டத்தின் நடப்பாண்டுக்கான இறுதி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், கலந்துரையாடல்களில் ஈடுபட்ட போதே இந்த வாக்குவாதம் நிகழ்ந்துள்ளது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு இடையிலேயே இந்தத் தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

குற்றம் சாட்டினர்

இதன்போது ஒரு கட்டத்தில் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களை விமர்சித்து உரையாற்றிக் கொண்டிருந்த நபர் திடீரென கூட்டத்திற்கு நடுவே வந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

இதனையடுத்து அங்கு வந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இதன்போது, அமைச்சர் கட்சி ஆதரவாளர்களை அழைத்து கட்சிக் கூட்டத்தை நடத்துவதாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றம் சாட்டினர்.

சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி

இருந்தபோதிலும், அமைச்சர் குறித்த நபர் பொது அமைப்பை சேர்ந்தவர் என தெரிவித்து சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சார்பில் சிவஞானம் சிறீதரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமானது அந்தக் குழுவின் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா மற்றும் இணைத்தலைவரான வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# வீடமைப்பு திட்டம் தொடர்பில் ஆராயப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்: அமைச்சர் டக்ளஸ்

வீடமைப்பு திட்டம் என்பதும் அதற்கான நிதி ஒதுக்கீடும் நாடளாவிய ரீதியில் உள்ள பிரச்சினையாக உள்ளதால் அது தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெவித்துள்ளார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நேற்றையதினம் (28.12.2023) டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றிருந்தது.

இதில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் வீட்டுத்திட்ட பயனாளர் தொடர்பில் ஆராயப்பட்ட போதே அமைச்சர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

வீட்டுத் திட்டங்களின் முன்னேற்ற நகர்வுகள்

தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வீட்டுத் திட்டங்களின் முன்னேற்ற நகர்வுகள் தொடரில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு ஆராயப்பட்டன.

இந்த நிலையில் 5 மில்லியனுக்கே வீடு கட்ட முடியாதென குறை கூறிக்கொண்டிருக்கும் மாவட்டமாக யாழ்ப்பாணம் இருக்கின்றது என வடமாகாண ஆளுநர் குற்றம் சாட்டியுள்ளார்.

குறிப்பாக ஒரு மில்லியன் திட்டத்துக்கு 403 பயனாளரும், 6 இலட்சம் திட்டத்திற்கு 101 பயனாளரும் கோரியுள்ளதாக துறைசார் அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

இதில் ஆறு இலட்சம் திட்டம் என்பது தற்போதைய சூழ்நிலையில் சாத்தியமானதென்று அல்ல. இதனை குறைந்தது பதினைந்து இலட்சமாக உயர்த்தவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டதுடன் அதுவரை குறித்த இரு திட்டங்களுக்கும் அனுமதி வழங்க கூடாதெனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மின்கலம் பொருத்திய வீட்டு திட்டம்

இதேநேரம் எந்தவொரு திட்டமும் பயனாளரின்



விருப்பின்றி வழங்கப்படாது என சுட்டிக்காட்டிய ஆளுநர், “மற்றொரு திட்டமான 25000 சூரிய மின்கலம் பொருத்திய வீட்டு திட்டத்திற்கு பயனாளிகள் பட்டியல் கிடைக்கவில்லை என்றும், அதன் பின்னர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்கு கொண்டு சென்று அவர் பிரதேச செயலகர்களுடன் அது தொடர்பில் கலந்துரையாடி தெளிவுறுத்திய பின்னர் அதற்கான பயனாளர்கள் தெரிவு நடைபெற்று வருவதாகவும்” சுட்டிக்காட்டியிருந்தார்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் சுமார் 16 ஆயிரம் பேர் வீடு அற்றவர்களாக இருக்கின்ற நிலையில் இதில் 10 ஆயிரம் வீட்டு திட்டத்தை யாழ்ப்பாணத்துக்கு கொடுத்துள்ளதாகவும் அதற்காக இதுவரை 8957 பேரது பெயர்கள் தற்போது கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆனாலும் இந்த வீட்டு திட்டம் யாழில் சாத்தியம் இல்லை என்று மக்களை குழப்பும் நிலை காணப்படுகின்றது. சுமார் 1000 சதுர அடி கொண்ட குறித்த வீட்டுத் திட்டத்தில் கூரை சூரிய மின்கலம் பொருத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் சுடிக் காட்டப்பட்டது.

# மட்டக்களப்பில் கடும் மழை: நவகிரி குளத்தின் வான்கதவுகள் திறப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்துவரும் கடும் மழை காரணமாக நவகிரி குளத்தின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் நேற்றைய தினம் (28.12.2023) கடும் மழை பதிவாகியுள்ள நிலையில், அந்த மாவட்டத்தின் தாழ்நிலங்கள் உட்பட பல இடங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

இருதயபுரம், ஜெயந்திபுரம், கூழாவடி, மாமாங்கம், உப்போடை, ஊறணி உட்பட பல பகுதிகளில் உள்ள தாழ்நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன் வீதிகளும் வெள்ளத்தில் நிரம்பியுள்ளதாக எமது பிராந்திய செய்தியாளர் தெரிவித்தார்.

வான்கதவுகள் திறப்பு

தொடர்ந்து, மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான குளங்களில் ஒன்றான நவகிரி குளத்தின் நீர்மட்டம், வான்பாயும் நிலைமை காரணமாக, குளத்தின் இரண்டு வான்கதவுகள் ஐந்து அடி வரை திறக்கப் பட்டுள்ளன.

இதனால், போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில், வாவி மற்றும் நவகிரி ஆற்றுப்படுக்கையினை அண்டியுள்ள மக்களை அவதானமாக இருக்குமாறு போரதீவுப்பற்று பிரதேச செயலாளரினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்றைய தினம் மினிசூறாவளி காரணமாக சேதமடைந்த வீடுகளை, போரதீவுப் பற்று பிரதேச செயலாளர் ரங்கநாதன், நேரில் சென்று பார்வையிட்டதுடன் சேத நிலைமைகள் தொடர்பிலும் மதிப்பீடுகளை மேற்கொண்டுள்ளார்.




# தேசிய மட்ட பளுதூக்கல் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனா சாதனை..!




தேசிய மட்ட இளையோருக்கான பளுதூக்கல் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி இரு வீராங்கனைகள் வெற்றியீட்டி சாதனை படைத்துள்ளனர். பொலன்னறுவையில் நேற்று(28) இடம்பெற்ற போட்டியில் 87 kg பிரிவில் ஜதுசா 103 kg எடையைத் தூக்கி தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளதுடன் 71kg பிரிவில் சிறீவித்தகீ 88kg தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுள்ளார்.



# ஈழத்து இசைக்குயில் கில்மிஷாவுக்கு யாழில் அமோக வரவேற்பு!








இந்திய தொலைக்காட்சி சீ தமிழ் நடாத்திய சரிகமப லிட்டில் சம்பியன் பாடல் போட்டி ஒன்றில் யாழ்ப்பாணத்தில் இருந்து கலந்து கொண்ட கில்மிசா வெற்றியாளராக தெரிவாகியிருந்தார். யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து திறந்த காரில் புறப்பட்ட கில்மிஷாவுக்கு வீதியெங்கும் மக்கள் மகிழ்ச்சி பொங்க வரவேற்றனர். யாழ்ப்பாணம் - அரியாலை பகுதியில் கில்மிஷாவை வரவேற்பதற்காக பெருமளவான மக்கள் வீதிகளில் திரண்டு ஆதரவு தெரிவித்தனர். தமிழ் கலாசார பாரம்பரிய நடனங்கள் ஆடப்பட்டு, முத்து சப்பரத்தில் கில்மிஷாவை ஏற்றி ஊர் மக்கள் தூக்கி சென்றனர். அரியாலை கலைமகள் சனசமூக நிலைய முன்றலில் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. மேலும் சாரங்கா இசைக்குழுவினரின் இசையில் கில்மிஷா சில பாடல்களையும் பாடியுள்ளார்.

















# தமிழீழ விடுதலைப் போராட்டத்தை உயிராக நேசித்தவர் கப்டன் விஜயகாந்த்!

## தமிழீழ விடுதலை இயக்க யாழ் மாவட்ட அமைப்பாளர் சபா குகதாஸ்

மக்கள் திலகம் எம் ஜ ஆர் அவர்களுக்கு அடுத்து ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை உணர்வு பூர்வமாக நேசித்தவர் புரட்சிக் கலைஞன் கப்டன் விஜயகாந் அவர்கள். கப்டன் சிறந்த நடிகராக இருந்தாலும் ஈழத் தமிழர் விடுதலைப் போராட்டத்தில் விசுவாசமாக இருந்தவர்.

ஈழத் தமிழர் விடுதலை போராட்டத்தை உயிராக நேசித்தார் என்பதற்கு விஜயகாந்தின் நூறாவது திரைப்படம் கப்டன் பிரபாகரன் என்ற பெயரில் வெளியாகியதுடன் தன்னுடைய மூத்த மகனுக்கு விஜய் பிரபாகரன் என பெயர் வைத்தமை சிறந்த எடுத்துக் காட்டு இவற்றுக்கு அப்பால் தன்னால் இயன்ற நிதி உதவியையும் விடுதலைப் போராட்டத்திற்கு வாரி வழங்கிய வள்ளல் அத்துடன் ஏழைகளுக்கு வாரி வழங்கிய ஏழைகளின் தலைவன்.

திரைப்படத்திலும் அரசியலிலும் நிஜ வாழ்க்கையிலும் ஒரே பேச்சு அதே சிந்தனை இவையே அவரது சிறப்பு. அன்னாரின் இழப்பு என்பது ஈடு செய்ய முடியாத பேரிழப்பு என்றும் ஈழதேசம் மறவாது.

எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் இரங்கலையும் தெரிவிக்கின்றோம்.



# கோடிக்கணக்கான ரூபாய் கடனிலிருந்து நடிகர் சங்கத்தை மீட்டவர் விஜயகாந்த்!

## சீமான் இரங்கல்.



இந்நிலையில், சீமான் தனது இரங்கல் செய்தியில், ”தமிழ்த்திரைத்துறையில் தமது கம்பீரமான நடிப்பாற்றலால் நாற்பதாண்டுகளுக்கும் மேலாக முன்னணி கதாநாயகனாகத் திகழ்ந்த ஆகச்சிறந்த திரைக்கலைஞர், தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் நிறுவனத்தலைவர், தமிழ்நாட்டின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அன்புச்சகோதரர் கப்டன் விஜயகாந்த் மறைவெய்திய செய்தியறிந்து பெரும் அதிர்ச்சியும், மிகுந்த மனவேதனையும் அடைந்தேன்

கப்டன் விஜயகாந்த் நடிகர் சங்கத்தின் தலைவர் பொறுப்பை ஏற்றிருந்தபோது, அனைவரையும் ஒருங்கிணைக்கும் கனிவுமிக்கப் பெருங்குணத்தாலும், நிர்வாகத் திறமையாலும் கோடிக்கணக்கான ரூபாய் கடனிலிருந்து நடிகர் சங்கத்தை மீட்ட பெருமைக்குரியவர். தம் நண்பர்கள் பலரின் திரைத்துறை வளர்ச்சிக்கு காரணமாகத் திகழ்ந்த பெருந்தகை.

தான் நடிக்கும் படப்பிடிப்பு தளமானாலும், தமது அலுவலகமானாலும் பசியோடு யாரும் இருந்திடக் கூடாது என்று தம்மை நாடி வந்த மக்கள் அனைவருக்கும் பசியாற உணவளித்த மனிதநேயவாதி. தமிழ்த்திரைத்துறையிலும், அரசியல் துறையிலும் அவர் படைத்த சாதனைகள் காலத்தால் அழியாதவை. கப்டன் விஜயகாந்தின் புகழ் தமிழ்நாட்டு மக்கள் மனங்களில் என்றென்றும் நீங்காது நிலைத்திருக்கும்.

கப்டன் விஜயகாந்தின் மறைவால் துயருற்றுள்ள தேமுதிக பொதுச்செயலாளர் அம்மையார் பிரேமலதா விஜயகாந்த் அவர்களுக்கும், தேமுதிக தொண்டர்களுக்கும், உலகெங்கும் வாழும் அவருடைய லட்சக்கணக்கான ரசிகர்களுக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்து, இப்பெருந்துயரில் பங்கெடுக்கிறேன்” எனக் கூறியுள்ளார்.



# விஜயகாந்த் வாழ்க்கை வரலாறு

## அரிசி ஆலை, முதல் எதிர்க்கட்சித் தலைவர் வரை




**கட்சி ஆரம்பித்து ஓராண்டுகூட நிறைவடையாத நிலையில், 2006-ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், தனித்துப் போட்டி என்று கூறி 232 தொகுதிகளில் வேட்பாளர்களை நிறுத்தியவர்.**

**பிறப்பும் பின்னணியும்:**

மதுரை மாவட்டம், திருமங்கலத்தில் 1952-ம் ஆண்டு, ஆகஸ்டு 25-ம் தேதி அழகர்சாமி-ஆண்டாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார் விஜயராஜ் என்கிற விஜயகாந்த். இவரின் மனைவி பிரேமலதா. இவர்களுக்கு விஜய பிரபாகரன், சண்முக பாண்டியன் என இரண்டு மகன்கள் இருக்கிறார்கள்.

**வராத படிப்பும்... வந்த நடிப்பும்:**

சிறு வயது முதலே சினிமாமீது இருந்த பிடிப்பின் காரணமாக, பல பள்ளிகள் மாறியும் அவரால் பத்தாம் வகுப்பு வரை மட்டுமே படிக்க முடிந்தது. அதேநேரம் தான் விரும்பிப் பார்க்கும் எம்.ஜி.ஆரின் படங்களை சீன் பை சீனாகத் தன் நண்பர்களிடம் விவரிக்கும் அளவுக்கு சினிமா மீது அவருக்கு ஆர்வம் இருந்தது. படிப்பை நிறுத்திய பிறகு கீரைத்துறையில் இருக்கும் தன் தந்தையின் அரிசி ஆலையில் பணிபுரிந்தார்.

**திரைப் பயணம்: விஜயராஜ் டு விஜயகாந்த்**

தனது நண்பர்களின் உந்துதலின் பெயரிலும், தனக்கிருந்த ஆர்வத்தாலும் சினிமாவில் நடிப்பது என முடிவுசெய்து சென்னைக்கு வந்தார். பல்வேறு அவமானங்கள், புறக்கணிப்புகளுக்கு மத்தியில், 1979-ம் ஆண்டு எம்.ஏ.காஜாவின் இயக்கத்தில் வெளியான ஹஇனிக்கும் இளமை“ படத்தில் நடித்து, தன் திரைப்பயணத்தைத் தொடங்கினார். விஜயராஜ் என்ற தன் பெயரை விஜயகாந்த் என மாற்றிக்கொண்டார். ஹசட்டம் ஒரு இருட்டறை“, ஹதூரத்து இடிமுழக்கம்“, ஹஅம்மன்கோவில் கிழக்காலே“, ஹஉழவன் மகன்“, ஹசிவப்பு மல்லி“ என வெற்றிப்படங்களைக் கொடுத்து தமிழின் முன்னணிக் கதாநாயகனாக வலம்வந்தார். கிட்டத்தட்ட 150-க்கும் மேற்பட்ட படங்களில் நடித்த விஜயகாந்த், 1984-ல் மட்டும் ஒரே ஆண்டில் 18 படங்களில் நடித்து சினிமாத்துறையில் வரலாற்றுச் சாதனை புரிந்தார்.

1999-ம் ஆண்டு நடிகர் சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் விஜயகாந்த். பல ஆண்டுகளாக அடைக்க முடியாமல் இருந்த நடிகர் சங்கக் கடனை சிங்கப்பூர், மலேசியா என தமிழர்கள் அதிகம் வாழும் வெளிநாடுகளில் நட்சத்திரக் கலை விழாக்கள் நடத்தி வட்டியும் முதலுமாக அடைத்தார். மேலும், நலிவடைந்த கலைஞர்களுக்கு உதவி செய்வதற்காக ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகம் செய்து, பெரும் தொகையை வங்கியில் டெபாசிட் செய்தார். 2002-ம் ஆண்டு காவிரி நதிநீர் பிரச்னை உச்சத்தில் இருந்தபோது, அனைத்து நடிகர்களையும் ஒன்றிணைத்து ஹநீர் தராத கர்நாடாகாவுக்கு மின்சாரம் இல்லை!“ என்கிற முழக்கத்துடன் மாபெரும் போராட்டத்தை நெய்வேலியில் நடத்தினார்.

**தனிப்பற்று: தமிழ்மீதும் ஈழத்தமிழர்மீதும்...**

1965-ம் ஆண்டு மதுரையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தனது சிறு வயதிலேயே விஜயகாந்த் பங்கேற்றதாகச் சொல்லப்படுகிறது. அதேபோல, 1984-ம் ஆண்டு ஈழத்தமிழர்கள் மீதான படுகொலையைக் கண்டித்து சக நடிகர், நடிகைகளுடன் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் நடத்தி, படுகொலையை நிறுத்தவும், நீதி வேண்டியும் தமிழக ஆளுநரிடம் மனு அளித்தார். பின், 1986-ம் ஆண்டு அதே காரணங்களுக்காக சென்னை வட்டாட்சியர் அலுவலகத்தில் உண்ணாவிரதம் இருந்தார் விஜயகாந்த். அவரின் ரசிகர் மன்றத்தின் சார்பாக தமிழ்நாடு முழுவதுமுள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகத்தின் முன்பும் ஈழத்தமிழர்களுக்காக உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து ஈழத்தமிழர்களுக்காகக் குரல்கொடுத்தும், 1989-களில் மண்டபம் உள்ளிட்ட முகாம்களில் அகதிகளாக வசிப்பவர்களுக்கு உதவிபுரிந்தும் வந்தார். ஈழத்தமிழர்கள் உணர்வை உணர்ந்தவராக, ஈழத்தமிழர் கள் அழும்போது, என்னால் கொண்டாட்டத்தில் இருக்க முடியாது என்று கூறி தனது பிறந்தநாள் கொண்



டாட்டைத் தவிர்த்தார். (பின்னாள்களில் அவரின் பிறந்தநாள் வறுமை ஒழிப்பு தினமாக அறிவிக்கப்பட்டு, ஏழைகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன).

தனது 100-வது படத்துக்கு கேப்டன் பிரபாகரன்“ எனவும், தனது மூத்த மகனுக்கு விஜய பிரபாகரன்“ எனவும் பெயர்வைத்து தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் மீதும், ஈழத்தின் மீதும் தனக்கிருந்த பற்றைப் பறைசாற்றினார்.

தென்னிந்திய, அகில இந்திய“ என்றிருந்த தனது ரசிகர் மன்றத்தின் பெயரை 1982-ல் தமிழ்நாடு விஜயகாந்த் தலைமை ரசிகர் மன்றம் எனவும் பெயர் மாற்றம் செய்தார்.

**தேமுதிக: ரசிகர் மன்றம் டு அரசியல் கட்சி**

2000-ம் ஆண்டு, பிப்ரவரி 12-ல் தனது ரசிகர் மன்றத்துக்கென தனிக்கொடியை அறிமுகப்படுத்

மிகுதி அடுத்த பக்கம்.

# விஜயகாந்த் வாழ்க்கை வரலாறு

## அரிசி ஆலை, முதல் எதிர்க்கட்சித் தலைவர் வரை



தினார். அதைத் தொடர்ந்து, 2001-ம் ஆண்டு நடந்த உள்ளாட்சித் தேர்தலில் ரசிகர் மன்றத்தைச் சேர்ந்த நிர்வாகிகள் பல்வேறு இடங்களில் சுயேச்சையாகப் போட்டியிட்டு, பலர் வெற்றியும் அடைந்தனர். 2002—ல் ராஜ்ஜியம்" படத்திலிருந்து அரசியல் குறித்த வசனங்கள் அவரின் படங்களில் பட்டாசாக வெடிக்கத் தொடங்கின. அப்படி, விஜய காந்தின் இந்த அரசியல் நகர்வுகளைப் புரிந்து கொண்டதாலேயே ஆளும் அரசியல் கட்சிகள் அவருக்குப் பல நெருக்கடிகளைக் கொடுத்து வந்தன. அதேவேளையில், அரசியலுக்கு வர, சரியான களத்துக்காக, காரணத்துக்காகக் காத்துக் கொண்டிருந்தார் விஜயகாந்த். கள்ளக்குறிச்சியில் தன் ரசிகர் மன்ற நிர்வாகி ஒருவரின் திருமண விழாவில் விஜயகாந்த் வருகையை முன்னிட்டு கட்டப்பட்ட மன்றக் கொடிக்கம்பங்களை பா.ம.க-வினர் வெட்டிச் சாய்த்ததாகச் சொல்லப்பட்டது.

அதைத் தொடர்ந்து, நடந்த திருமண நிகழ்வில் ராமதாஸையும், அவரின் மகன் அன்புமணி ராமதாஸையும் விஜயகாந்த் விமர்சிக்க, பதிலுக்கு விஜயகாந்தை ராமதாஸ் விமர்சிக்க, ராமதாஸ் - விஜயகாந்த் மோதல், பா.ம.க தொண்டர்கள் — விஜயகாந்த் ரசிகர்கள் என விரிவடையத் தொடங்கியது. பல இடங்களில் விஜயகாந்தின் மன்றக் கொடிகள் வெட்டிச் சாய்க்கப்பட, மன்ற நிர்வாகிகள் கடுமையாகத் தாக்கப்பட்டனர். விஜயகாந்த் நடித்த ஹகஜேந்திரா" படத்துக்கு ராமதாஸால் சிக்கல் எழுந்தது. விஜயகாந்தைக் கடுமையாக விமர்சித்து வட மாவட்டங்களில் போஸ்டர்கள் ஒட்டப்பட்டன.

கண்கள் சிவக்க வெகுண்டெழுந்தார் நடிகர் விஜயகாந்த். ஊர் ஊராகச் சென்று தன் ரசிகர் மன்ற நிர்வாகிகளைச் சந்திக்க ஆரம்பித்தார். சென்ற இடங்களிலெல்லாம் விஜயகாந்துக்கு பலத்த வரவேற்பு கிடைத்தது. விஜயகாந்தைக் காண மக்கள் கூட்டம் அலைமோதியது. திருவண்ணா மலையில் கட்சி அறிவிப்பு, ஈரோட்டில் கட்சி தொடங்கும் தேதி, மாநாடு அறிவிப்பு என அதிரடிகாட்டத் தொடங்கினார் விஜயகாந்த். அந்தநேரத்தில் கோயம்பேடு மேம்பால விரிவாக்கத்துக்காக விஜயகாந்தின் மண்டபம் கையகப்படுத்த விருப்பதாகத் தேசிய நெடுஞ்சாலைத்துறையிட மிருந்து விஜயகாந்துக்கு நோட்டீஸ் பறந்தது. இந்தநிலையில், 2005-ம் ஆண்டு, செப்டம்பர் 14-ம் தேதி மிகப்பெரிய மாநாட்டை மதுரையில் நடத்தி, ஹஹதேசிய முற்போக்கு திராவிட கழகம்" எனும் அரசியல் கட்சியைத் தொடங்கினார் விஜயகாந்த்.

**தனித்து: சட்டமன்ற உறுப்பினராக...**

கட்சி ஆரம்பித்து ஓராண்டு நிறைவடையாத நிலையில், 2006-ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், தனித்துப் போட்டி என்று கூறி 232 தொகுதிகளில் வேட்பாளர்களை நிறுத்தியவர், பா.ம.க-வின் கோட்டையான விருத்தா சலம் தொகுதியில் அமோக வெற்றிபெற்றார். மற்ற வேட்பாளர்கள் தோல்வியடைந்தாலும் கணிசமான வாக்குகளைப் பெற்று, தே.மு.தி.க-வுக்கு 8.4 சதவிகித வாக்குகளைப் பெற்றுத்தந்தனர். அதைத் தொடர்ந்து, 2009-ல் நடைபெற்ற மக்களவைத் தேர்தலிலும் தனித்து நின்று, தோல்வியைத் தழுவினாலும் 10 சதவிகித வாக்குகளை தே.மு.தி.க பெற்றது.

தனித்தே போட்டியிட்டுவந்த விஜயகாந்த், முதன் முறையாக 2011-ம் ஆண்டு நடைபெற்ற சட்ட மன்றத் தேர்தலில் அ.தி.மு.க-வுடன் கூட்டணி அமைத்து தேர்தலைச் சந்தித்தார். 41 இடங்களில் போட்டியிட்ட தே.மு.தி.க., 29 இடங்களில் வெற்றி பெற்று எதிர்க்கட்சி அந்தஸ்தைப் பெற்றது. ரிஷிவந் தியம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்ற விஜயகாந்த் முதன்முறையாக சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவரானார்.

**மக்கள் நலக்கூட்டணி: முதல்வர் வேட்பாளராக...**

2011-ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் நடந்து முடிந்து நடைபெற்ற முதல் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே விஜயகாந்துக்கும் ஜெயலலிதா வுக்கும் மோதல் ஏற்பட்டு, அ.தி.மு.க-தே.மு.தி.க கூட்டணி முறிந்தது. 2014-ம் ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இடம்பெற்று தேர்தலைச் சந்தித்த தே.மு.தி.க., போட்டியிட்ட 14 தொகுதிகளிலும் படுதோல்வியடைந்தது.

2016-ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்த லில் ம.தி.மு.க., வி.சி.க., த.மா.கா., கம்யூனிஸ்ட் கட்சிகள் அங்கம்வகித்த மக்கள் நலக்கூட்டணியில் இணைந்து, முதல்வர் வேட்பாளராக அறிவிக்கப் பட்டு தேர்தலைச் சந்தித்தார் விஜயகாந்த். ஆனால், தேர்தல் முடிவில் ம.ந.கூட்டணி உட்பட தே.மு.தி.க-வும் போட்டியிட்ட 104 தொகுதியிலும் படுதோல் வியடைந்தது. உளுந்தூர்பேட்டையில் போட்டியிட்ட விஜயாகாந்த் மூன்றாம் இடத்துக்குத் தள்ளப்பட்டு டெபாசிட் இழந்தார். 2019-ம் ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலிலும் அ.தி.மு.க-பா.ஜ.க கூட்டணியில் இடம்பெற்று நான்கு தொகுதியில் மட்டுமே போட்டியிட்ட தே.மு.தி.க அனைத்திலும் படுதோல்வியடைந்தது.




மிகுதி அடுத்த பக்கம்.

# விஜயகாந்த் வாழ்க்கை வரலாறு

## அரிசி ஆலை, முதல் எதிர்க்கட்சித் தலைவர் வரை



**தொடர் சரிவில்: செல்வாக்கும் வாக்குவங்கியும்**

தனித்துப் போட்டியிட்டபோது 8.4மூ, 10மூ ஆக இருந்த தே.மு.தி.க-வின் வாக்குவங்கி, கூட்டணிக்குச் சென்ற பின்னர் 7.9மூ, 6.1மூ எனக் குறைந்து 2016 சட்டமன்றத் தேர்தலில் 2.4மூ ஆகச் சரிந்தது. நிர்வாகிகள் பலர் அ.தி.மு.க-வுக்கும் தி.மு.க-வுக்கும் சென்றனர். போதாக்குறைக்கு விஜயகாந்தின் உடல்நிலையும் மோசமடைந்தது. தொடர்ந்து, 2021 சட்டமன்றத் தேர்தலில் அ.ம.மு.க-வுடன், தே.மு.தி.க கூட்டணி அமைத்து தேர்தலைச் சந்திக்கிறது. ஆனால், இந்தத் தேர்தலில் விஜயகாந்த் போட்டியிடவில்லை. அவரின் மனைவியும், கட்சியின் பொருளாளருமான பிரேமலதா விஜயகாந்த் விருத்தாசலம் தொகுதியில் போட்டியிடுகிறார்.

**சரித்திர சாதனைகளும்... சறுக்கிய விமர்சனங்களும்:**

விஜயகாந்த், தான் அரசியலுக்கு வருவதற்கு முன்பாகவே 1989-ல் ஈரோட்டில் இலவச மருத்துவமனை, சென்னை சாலிகிராமத்தில் இலவச மருத்துவமனை, ஆண்டுதோறும் பள்ளி மாணவர்களுக்கு லட்சக்கணக்கில் கல்வி நிதியுதவி, எம்.ஜி.ஆர் காது கேளாதோர்-வாய் பேசாதோர் பள்ளி, லிட்டில் ஃபிளவர் பார்வையற்றோர் பள்ளிகளுக்கு நன்கொடை, தமிழகம் முழுவதும் 60 இடங்களில் இலவச கணினிப் பயிற்சி மையம், இலவச திருமண மண்டபங்கள், ஏராளமான ஏழை ஜோடிகளுக்கு இலவசத் திருமணம், கேப்டன் ஸ்போர்ட்ஸ் அகாடமி எனக் கலக்கியவர். குஜராத் பூகம்பம், கார்கில் போர், சுனாமி, கும்பகோணம் பள்ளி தீ விபத்து எனப் பல சோக நிகழ்வுகளுக்குத் தன் சொந்தச் செலவில் நிவாரணங்களை கொடுத்து உதவிவந்தார். அரசியல் கட்சி தொடங்கிய பின்னர் தானே புயல், ஆந்திரா புயல், ஒடிசா வெள்ளம் எனப் பாரபட்சமின்றி முதல் ஆளாக முன்வந்து நிவாரணங்கள் வழங்கினார். மேலும், பல்வேறு தமிழர் சார்ந்த உரிமைப் போராட்டங்களையும் முன்னின்று நடத்தினார். இது போன்று எண்ணிலடங்கா சாதனைகளுக்குச் சொந்தக்காரர் விஜயகாந்த்.

அதேவேளையில், சட்டமன்றத்தில் கடுமையாக நடந்துகொண்டது, வேட்பாளரை அடித்தது, மனைவி மைத்துனர் ஆதிக்கத்தில் கட்சியை விட்டது ஆகியவை இவர்மீது முன்வைக்கப்படும் விமர்சனங்கள். இருப்பினும், தனிப்பட்ட முறையில் அனைவராலும் நேசிக்கக்கூடிய மனிதராகவே இன்றளவும் வலம்வருகிறார் விஜயகாந்த்





அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை.




# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලෑර්නර්ස් KIRUBAA LEARNERS

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
- மும்மொழிகளிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறையில் கட்டணங்கள்.
- இரவிலும் வாகனப் பயிற்சிகள்.




**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
021 222 4353
0777 22 5292

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | பூநகரி 021 320 1818 |
| ஆவரங்கால் 021 222 6688 | சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | மன்னார் 023 225 1656 |
| முழங்காவில் 021 300 6544 | கிளிநொச்சி 021 228 5505 | விஸ்வமடு 021 320 1515 | வவுனியா 024 222 7777 |

# புலமைப்பரிசில் மாணவர்களுக்கான விசேட மாதிரி வினாத்தாள் பதிப்பு!

(அனுபவம் மிக்க ஆசிரியர்களினால் தயாரிக்கப்பட்டது)

## எதிர்வரும் தை மாதம் முதல்....

உங்கள் தேசியம் பத்திரிகையில்
வார இதழ்களாக வெளிவரவிருக்கின்றன.

தரம் 4 மற்றும் 5




வார இதழ் தேசியம் www.thesiyamnews.com THESIYAM
077 1499094